SIDDHANTHAM
Vol. 28—No. 4

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 28 | மன்மத சித்திரை 1955 ஏப்ரல் | இதழ்

OFFICE OF THE ... 1955

உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
| --- | --- |
| சித்திரைச் சதயம் ... | 129 |
| சக்தி வழிபாடு ... | 135 |
| பேழ்கணித்தல் ... | 139 |
| விதியும் - பதியும் ... | 143 |
| திருநீலகண்ட நாயனார் ... | 145 |
| கோலாலம்பூர் சைவப்பெண்கள் மாநாட்டுத் தலைமையுரை ... | 148 |
| சர் பொன்னம்பலம் அருணாசலம் ... | 155 |


1680
2-55

...பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.
...ரியர் : புலவர் - முருகவேள், - பி.ஓ.எல்.
...த்தாந்த மகா சமாஜம்
...ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

JL
R673 ... /N28
N55 28.4.
186910

# திருமுறைகள் வாங்கிப் பரிசுகள் பெறுக

## ஆயிரம் ரூபா பரிசுத்திட்டம்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அடங்கிய முதல் ஒன்பது திருமுறைகளையும் பெரியபுராணத்தையும் வாங்குவோருக்கு ஒரு பரிசுத்திட்டத்தை நமது சமாஜம் ஏற்பாடு செய்துள்ளது. முதல் ஒன்பது திருமுறைகளின் விலை ரூபா எட்டு, பெரியபுராணம் விலை ரூபா மூன்று. இவற்றை ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் பெறுதற்குத் தபாற்செலவு ரூ. இரண்டரை. ஆ. ரூ. 13-8-0 முன்பணமாக அனுப்புவோர் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய புத்தகங்களும், எண் குறித்துள்ள ஒரு டிக்கெட்டும் அனுப்பப்படும். ஆயிரம் டிக்கெட்டுகள் இவ்வாறு செலவானவுடன், "சித்தாந்தம்" பத்திரிகையில் குறிக்கப்படும் ஒரு பொது இடத்தில் ஒரு விடுமுறை நாளில் டிக்கெட்டு எண்கள் குலுக்கப்பட்டு, அவற்றுள் முதலாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. அறுநூறு முதற் பரிசாகவும், இரண்டாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. இருநூற்றைம்பதுஇரண்டாம் பரிசாகவும், மூன்றுவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. நூற்றைம்பது மூன்றும் பரிசாகவும் அளிக்கப் பெறும். இப்பரிசுகள் பெறுதற்குச் சமாஜ அங்கத்தினரும். வேறு பொது மக்கள் எல்லோரும் தகுதியுடையவராவர், வி. பி. மூலமோ, ரயில்வே பார்சல் மூலமோ புத்தகங்கள் அனுப்பப்படமாட்டா. மேற்கூறிய புத்தகங்களோடு சமாஜ இதர வெளியீடுகளையும், நாலாயிர திவ்யப்ரபந்தம் திருப்பாவை வியாக்யானம் முதலியவைகளையும் வாங்குவோருக்கும் இப்பரிசுத் திட்டத்தில் இடமுண்டு. எவ்வளவு சீக்கிரமாக ஆயிரம் டிக்கெட்டுகள் விற்றுமுடிகின்றனவோ, அவ்வளவு சீக்கிரம் பரிசுகள் தரப்படும். ஆகையால் அன்பர்கள் விரைந்து வாங்குக. இலங்கை நண்பர்கள் இந்தியாவிற்குப் பணம் அனுப்புவதில் பலதடைகளும் தாமதமுமிருப்பதால், அவர்கள் மட்டும் வி. பி. தபால் மூலம் புத்தகங்களைப் பெறலாம். மணியார்டர் அனுப்பவேண்டிய விலாசம் :— திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை—1. இங்ஙனம் : ச. சிவகுமாரன், காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம் ; ம. பாலசுப்பிரமணியன், பத்திராதிபர், "சித்தாந்தம்" 10—4—1955.

Regd M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 28 | மன்மத சித்திரை 1955 ஏப்ரல் | இதழ் 4

## சித்திரைச் சதயம்

பத்திராசிரியர்

சித்திரைச் சதயம் ஒரு சிறந்த திருநாள். தமிழ் மக்கள் உள்நிறைந்த பெருமகிழ்ச்சியோடு இதைக் கொண் டாடும் பொறுப்புடையவர்கள். இந்த நல்ல நாளில், திரு நாவுக்கரசு சுவாமிகள் "நண்ணரிய சிவாநந்த ஞானவடிவே யாகி" அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்திருந்தார். தமிழ் நாட்டுச் சிவாலயங்களிலும், குருபூசை மடங்களிலும், சைவ சபைகளிலும், சமயப்பற்றுடைய சைவக் குடும்பங் களிலும் இத்திரு நக்ஷத்திரம் பலவகையாகக் கொண்டாடப் பெறுகின்றது. அடியார்கட்கும் எளியார்கட்கும் அன்ன மளித்தல்,சுவாமிகளின் வரலாறு திருவாக்கு திருத்தொண்டு பற்றிய சொற்பொழிவுகள், சிறந்த அலங்காரம் மேளம் தேவாரபாராயணம் முதலியவற்றோடு சுவாமிகள் திருவுரு வத்தைத் திருவீதி வலம் செய்வித்தல், எனும் வகைகளில் இக்கொண்டாட்டம் நடைபெறும். திருவதிகை திருப்புகலூர் போன்ற சில தலங்களில் மட்டும் பத்துநாள் விழாவும், நாடோறும் சில அற்புதங்களும் பதிகங்களும் நடைபெறும். நாவுக்கரசர் புராணத்தில் சேக்கிழார் திருவாக்காகிய 429 பாடல்களையும் அப்பர் தேவாரம் முழுவதையும் இத்திரு நாளை ஒட்டி ஓதுவோர் எண்ணிக்கை ஐந்தோ, பத்தோ, ஐம்பதோ, நூறோ என்பதை, எழுதும் கீழ்க்கணக்கு இன்னப்ப ரீசனே அறிவான். அப்பர் உபதேச மொழி களில் சிலவற்றையேனும் தமது வாழ்க்கையில் உறுதியாகப் பற்றி ஒழுகுவோர் இலர் என்றே சொல்லலாம். ஒருவர் இருவர் இருப்பினும், தமிழ்நாடும் சைவ சமயமும இப்

போதுள்ள வருத்தம் மிக்க நிலையில் இரா. அப்பர் போன்ற சைவப்பெரியார் ஒருவர் இருவர் நல்வாழ்க்கையும் சைவத் தொண்டுமே தமிழ் மக்களுக்கு எல்லா நலங்களையும் தரவல்லன.

"சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல்" என்பது தமிழ் முதுமொழி. அப்பரைப்போல் இனிமையாகவும், இடித்தும் புத்தி புகட்டுவோர் எவருமிலர். வாழ்க்கையில் உண்மையைக் கடைப்பிடித்து, அதற்காக எதையும் கைவிடும் சத்தியாக்கிரகத் தியாக முறையை முதல் முதலாக உலகுக்கு அளித்தவர் அப்பரே. இம்முறையைப் பின்பற்றி நமக்குச் சுதந்தரம் வாங்கிக்கொடுத்த காந்தியடிகள் வாழ்க்கையின் பல பகுதிகள் அப்பர் வாழ்க்கைக்கு ஒப்பானவை. ஆன்ம சுயராஜ்யத்திற்கு உழைத்தவர் அப்பர்; தேச சுயராஜ்யத்திற்குழைத்தவர் காந்தியடிகள். ஆன்ம வாழ்க்கையிற் குறுக்கிட்ட பல்லவ மன்னனை வென்றவர் அப்பர், அரசியல் வாழ்க்கையிற் குறுக்கிட்ட ஆங்கில மன்னனை வென்றவர் காந்தியடிகள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற கொள்கைகளைக் கடைப்பிடித்து இருவரும் ஒழுகினார்கள். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார்சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று உபதேசித்தவர் அப்பர். அந்நிலையிலுள்ள மக்களுக்குக் கடவுள் மக்கள் (ஹரிஜனங்கள்) என்று பெயரிட்டு, அவர்களோடு கலந்து பழகி, அவர்களை உயர்த்த அரும்பாடுபட்டவர் காந்தியடிகள்.

அப்பருடைய வாழ்க்கையில் பல செம்பொருள்கள் நாம் கடைப்பிடித்தற்குரியன. செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்து, தந்தையார் பொருள் அனைத்தையும் இளமையிலேயே பெற்றவர் அப்பர். தமக்கையாரை "உயிர்தாங்கி அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கித்" தவம் புரியுமாறு செய்தவர் அப்பரே. அப்பர் தடுத்திராவிட்டால் திலகவதியார் உயிர் நீத்திருப்பர். தாம் பெற்ற செல்வத்தைத் தீய வழிகளில் செலவிடாமல், "கருணையினால் ஆசில் [illegible] தண்ணீர்ப்பந்தரும்" அமைத்தார். ஆ[illegible] காவளர்த்தும் குளம்தொட்டும், [illegible]வலர்க்கு வளம் [illegible] நல்கியும்,

18690



யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார். இவ்வாறு பல துறைகளில் ஈகை புரிவோர்க்கு ஒவ்வொரு சமயம் ஆணவம் தடித்து வளர்வதுண்டு. Excessive humanitarianism leads to egotism என்று மேல் நாட்டறிஞர் சிலரும் கூறுகின்றனர். ஆணவத்தின் சேஷ்டைகளுள் ஒன்று நாஸ்திகம். கடவுள் இல்லையென்பவருள் ஒரு சாரார் சமண சமயத்தினர். எனவே சேக்கிழார் அழகாகக் கூறுகிறபடி, அப்பர் "சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால், கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம்" குறுகினார்.

இக்காலத்தில் செல்வர்களுட் பலர், பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரி நடத்தல் முதலியவைகளை மட்டும் செய்ய முன்வருகின்றனர், கடவுள் பெயரைச் சொன்னாலே சீறிவிழுகின்றனர். நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால் இவர்கள் வாழ்க்கை வீணாகின்றது. "இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க்கருளும் வைத்தார்" என்று அப்பர் கூறும் உபதேசமொழியை இவர்கள் மறுப்பவர்கள். "கடவுள் நமக்குத்தந்த பொருளை அவர் திட்டத்தின்படி நாம் ஈகின்றோம் அருள் பெறுகின்றோம்" என்று இவர்கள் நினைப்பதில்லை. தங்கள் பொருளையே ஈவதாக நினைப்பதால் ஆணவம் வளர்கின்றது, நாத்திகம் முற்றுகின்றது, அருள் கிடைப்பதில்லை.

அப்பர் அமண் சமயத்திற் புகுந்து அருங்கலை நூல் பலவும் கற்றுத் தேர்ந்து தருமசேனர் எனும் பட்டமும் பெற்றார், தேரரை வாதில் வென்று சமண சமயத்தலைமையினில் மேம்பட்டார். திலகவதியார் திருவதிகை வீரட்டானத்தில் திருவலகு திருமெழுக்கு திருமாலை தொடுத்தல் முதலான சரியைத்தொண்டுகள் செய்து, தமது தம்பியார் மீண்டும் சைவராக வேண்டுமென்று சிவபெருமானை நாடோறும் வேண்டினார். சூலை நோய் கொடுத்து மீட்பதாகக் கனவில் பெருமான் அருளினார். சூலைநோய் கூற்றுவனே போல அப்பரை வாட்டிற்ற. சமணர்கள் மந்திரமும் மருந்தும் சிகிச்சையும் பலன் தரவில்லை. தமக்கையாருக்கு ஆள்மூலம் செய்தி விடுத்தார். நன்றறியா அமண்பாழி நண்ணுதற்குத் திலகவதியார் இசையவில்லை. அப்பர் நோய் வருத்தம் பாராது திலகவதியார் இருப்பிடம் சேர்ந்தார்,

விழுந்து வணங்கினார். "கற்றை வேணியர் அருளே காணும் இது கழலடைந்தோர் பற்றறுப்பார்தமைப் பணிந்து பணி செய்வீர்" என்று தமக்கையார் கூறி, ஐந்தெழுத்தோதித் திருநீறளித்துத் திருக்கோயிலுக் கழைத்துச் சென்றார். இறையருட் பார்வையால் சூலைநோய் நீங்கிற்று, தமிழ்மாலைகள் சாத்தும் உணர்வு ஓங்கிற்று, கூற்றாயினவாறு எனும் திருப்பதிகம் தோன்றிற்று, நாவுக்கரசெனும் பட்டம் எய்திற்று. நாவுக்கரசர் மனத்தொடு வாய்மையுடன் மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விளங்கினார்.

அப்பர் சைவர் ஆகியதைக் கண்ட சமணர்கள் அரசனிடம் பல பொய்களைச் சொல்லி அப்பருக்குப் பலவகையான தீங்குகளைச் செய்வித்தனர். அவைகளை யெல்லாம் இறைவன் திருவருளால் அப்பர் வென்றார். கொல்களிறு, நச்சுணவு, நீற்றறை, கற்றூணைப் பூட்டிக் கடலிற்பாய்ச்சுதல் முதலியவற்றை நாம் அனைவரும் அறிவோம். கல்லே தெப்பமாகக் கரையேறிய அப்பர், திருப்பாதிரிப் புலியூர் இறைவனை ஈன்றாளுமாய் எந்தையுமாய்த் தோன்றாத் துணையாய்ப் போற்றிப் புகழ்ந்து பல பதிகள் தரிசித்து மீண்டும் திருவதிகை சேர்ந்தார்.

"தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

என்று சேக்கிழார் அழகாக அப்பருடைய திருவுருவக் கோலத்தை எழுத்தோவியமாகக் காட்டுகிறார். அப்பர் சமணராயிருந்தபொழுது சிவபெருமானை இகழ்ந்து கூறினமைக்கு மிக வருந்திப் பல பதிகங்கள் பாடினார் ("ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே" எனமுடியும் 6265-6275 முதலிய திருத்தாண்டகப் பாசுரங்கள் காண்க.)

"நாமார்க்கும் குடியல்லோம்" என்ற மறுமாற்றம் பெற்ற மகேந்திர வர்மன் எனும் பல்லவ மன்னன், அப்பர் காலில் விழுந்து, மன்னிப்புப் பெற்றுச் சைவனாகிச் சமண் பாழிகளை இடித்து. அவற்றின் கற்களைக்கொண்டே, "குணபர ஈச்சரம்" எனும் சிவாலயம் எடுப்பித்தான். (இம் மன்னனே திரிசிராப்பள்ளி முதலிய இடங்களிலும் குகைக் கோயில்கள் கட்டினான்.)



அப்பர் பல தலங்கள் தரிசித்துச் செல்லும் இடமெல்லாம் சைவ சமயத்தின் மேன்மையை விளக்கிப் பல பதிகங்கள் பாடிப், பெண்ணாகடம் எனும் தலத்தில் தமது தோள்களில் சூலமுத்திரையும் இடபமுத்திரையும் தரிக்கப் பெற்றுத் தில்லைத் திருச்சிற்றம்பலம் சேர்ந்தார். சேக்கிழார் சுவாமிகள், அப்பர் தில்லைக்கூத்தனைத் தரிசித்த நிலையைப் பின்வருமாறு காட்டுகிறார் :—'கையுந் தலைமிசை புனை அஞ்சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே, பெய்யுந் தகையன கரணங்களு முடன் உருகும் பரிவின பேறெய்தும்."

தில்லையில் தங்கிய போழ்து, திருஞானசம்பந்தர் மூன்று வயதில் ஞானப்பாலுண்ட செய்தியை, அடியார்கள் உரைப்பக்கேட்டு, அவரைக்காண விரும்பி அப்பர் சீகாழிக்குச் சென்றார். அங்கு சம்பந்தர் நாவுக்கரசரை "அப்பரே" என்று அழைத்தமையால்தான் "அப்பர் சுவாமிகள்" எனும் பெயர் திருநாவுக்கரசருக்கு உண்டாயிற்றென்பதை நாம் அறிவோம். இருவரும் தோணியப்பரை தரிசிக்கச் சென்ற காட்சியை "அருட்பெருகு தனிக்கடலும்" எனத் தொடங்கும் திருப்பாடலில் சேக்கிழார் அழகாகப் புகழ்கின்றார். பிறகு சம்பந்தரிடம் விடைபெற்று பல தலங்கள் தரிசித்துத், திருநல்லூரில திருவடி தீக்ஷை பெற்றுத் திங்களூர் சேர்ந்தார். அங்கு அப்பூதியடிகள் "நீர்தாம்யார்" என்று கேட்டதற்குப் "பிறதுறையின் நின்றேற அருளுபெரும் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான்" என்று தமது தாழ்மையை வெளிப்படுத்தினார். ஆங்கு விடந்தீர்த்த அற்புதத்தை நாம் நன்கறிவோம் (சென்ற இதழிலும் காணலாம்.) பிறகு அப்பரும் திருஞான சம்பந்தரும் பல தலங்கள் தரிசித்துத் திருவீழி மிழலையில் இறைவன் கொடுத்த படிக்காசு கொண்டு, அடியார்கட்கு (பஞ்சநிவாரண முறையில்) நாடோறும் அன்னமளித்துத் திருமறைக்காட்டை யடைந்தனர். ஆங்கு வேதம் மூடியிருந்த கோயிற் கதவை அப்பர் திறக்கவும் சம்பந்தர் மூடவும் பாடினார்கள். மதுரையிலிருந்து பாண்டியன் தேவியாரும் மந்திரியாரும் அனுப்பிய வேண்டுகோளுக்கிணங்க, சம்பந்தர் மதுரை சென்று சமணரை வென்று சைவம் வளர்த்தார். அப்பர் பல தலங்கள் தரிசித்து பழையாறை வடதளி எனும் தலத்திலிருந்த

சிவலிங்கத்தைச் சமணர்கள் மறைத்திருந்ததை உண்ணாவிரதமிருந்து வெளிப்படுத்தித் திருப்பைஞ்ஞீலியில் இறைவன் தந்த கட்டமுதையும் நன்னீரையும் உட்கொண்டு வடக்கு நோக்கி அண்ணாமலை, காஞ்சீபுரம் முதலியவற்றைத் தரிசித்து வடகயிலைக்கு யாத்திரை தொடங்கி காசிவரையில் சென்று அங்கிருந்து கையும் காலும் சிதைந்து, தேய்ந்து, புரண்டு புரண்டு சென்று பிறகு அசைவற்ற நிலையில் இருந்தார். கடவுள் ஒரு துறவி வேடத்தில் தோன்றி, “கயிலைக்குச் செல்ல இயலாதாகையால் திரும்புக” எனவும் அப்பர் “மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்” என்று கூற, அங்கு ஒரு பொய்கையில் மூழ்கப்பணித்த வண்ணம் மூழ்கித் திருவையாற்றில் திருக்குளத்தில் கரையேறிக் கண்டனவெல்லாம் சக்தியும் சிவமுமாய் விளங்கிய கைலாய காட்சியில் திளைத்தார். பிறகு திருப்பூந்துருத்தியில் ஒரு திருமடம் அமைத்து, அதில் இருக்கும் நாளில் சம்பந்தர் இவரைக்காண திருப்பூந்துருத்திக்குள் பல்லக்கில் வர, அப்பர் ஒருவரும் காணாத முறையில் அப்பல்லக்கைத் தாங்கி வந்தார். சம்பந்தர், “அப்பர் எங்குற்றார்” என்று அடியார்களை வினவ “உம்மைத் தாங்கிவரும் பெருவாழ்வு பெற்று இங்குற்றேன்” என்று அப்பர் கூறினார். உடனே சம்பந்தர் கீழிறங்க இருவரும் ஒருவரையொருவர் வணங்கினார்கள். சம்பந்தர் மூலமாகப் பாண்டி நாட்டுச் செய்திகளையறிந்த அப்பர், பாண்டிநாட்டில் யாத்திரை செய்து, இறுதியாகத் திருப்புகலூர் சேர்ந்து ஆங்கு பல பதிகங்கள் பாடி (மூவாசையும் அற்ற நிலையை சிவபெருமான் உலகவர் காண விளக்கியருள.) உழவாரத் திருப்பணியைத் தமது தளர்ந்த நிலையிலும் செய்து “எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே” எனும் திருப்பதிகம் பாடி இறைவன் திருவடி நீழலில் “நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகிச் சேர்ந்தார். (திருப்புகலூர் தலபுராணத்தில் சிவபெருமான் சிங்க வடிவில வந்து அப்பரை விழுங்கினார் என்ற செய்தி பெரியபுராணத்திற்கு முற்றிலும் மாறானது. இம்முறையில் நடைபெறும் அவ்வூர் ஐக்ய உத்சவமும சைவர்கள் மனதை புண்படுத்துவது) “என் கடன் பணி செய்துகிடப்பதே” எனும் அப்பர் மொழியை நாம் கடைப்பிடித்து நன்மை பெறுவோமாக.

# சக்தி வழிபாடு*

அ. கு. காமாக்ஷியம்மையார், எம்.ஏ.

உலகத்தின் இயற்கையினையும், உயிர்களின் பிறப்பிறப்பு சிறப்புக்களையும், உலகம் போன்றே எண்ணிறந்த கோளங்கள் அண்டவெளியில் தமக்குரிய நெறியினின்றும் சிறிதும் பிறழாது இயங்கும் ஆற்றலையும், ஆராய்ந்து பார்க்குங்கால், மக்களது ஆற்றலுக்கும் அப்பாற்பட்டு அனைத்துலகும் இயக்கிவரும் ஆற்றலொன்றுண்டு என்று அறிகின்றோம். நமது அன்றாட வாழ்க்கையிலுங் கூட அவ்வப்பொழுது உள்ளிருந்து உணர்த்தும் உயர்ந்த ஆற்றலையும் உணருகின்றோம். நினையாதவாறு எதிர்பாரா நிகழ்ச்சியாய் எதிர்நின்று வாழ்வில் வழிகாட்டுவதையும் ஓருகின்றோம். இதனையே “தோன்றாத் துணை” என்று மெய்யடியார் மேற்கொண்டனர். இவ்வாற்றலையே “சக்தி” எனவுங் கூறினர். இவ்வின்றியமையா சக்தியினையும், இதனை இயக்கும் வலவன் என, பரம்பொருளையும் சைவ சமயத்தினர் சிவம் – சக்தி என இரு கூறாக் கொண்டனர். இவ்விரு கூறுகளும் இணைந்தே எல்லாவற்றையும் இயக்குகின்றன என்றுங் கூறினர். சக்தியின் ஆற்றலைக் குறிப்பதற்கு பிருங்கிமாமுனிவரின் கதையே போதிய சான்றாகும். முற்றுந்துறந்த முனிவரான அன்னார், தனக்கே சக்தியின் அருள் தேவையில்லை எனக்கொண்டு சிவனையே வலம்வந்து வணங்கியதால் சக்தியானவள் அவரது உடற்சக்தி முழுதினையும் நீக்கிவிட, அம்முனிவர்க்கு முழுமுதற் கடவுளான முக்கண்ணன் மூன்றாங்காலையும் ஊன்றுகோலையும் தந்தனராம். இயற்கையான இருகால்களிலும் இருக்கவல்ல சக்தியை ஊட்டத் தன்னாலியலாது என்பதைக் காட்டவே செயற்கையான மூன்றாங்காலையும் ஊன்றுகோலையும் அருளினார் என்ற கதையின் இப்பகுதிதான் நன்கு சுவைத்தற்குரியது! இப்பகுதியே “சக்தி”யாம் இறைவியின் இன்றியமையாச் சிறப்பினையும் எடுத்தியம்புவது.

சக்தி வழிபாடு நம்நாட்டில் தொன்றுதொட்டே இன்றுவரை நின்று நிலவுவதாகும். ‘கொற்றவை’ என்று

*12—3—55-ல் பொள்ளாச்சி மாரியம்மன் ஆலயத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

வெற்றிக்கும் வீரத்திற்கும் உரியவளாகப் பண்டைய மன்னராலும் மக்களாலும் சக்தி வழிபடப் பெற்றாள் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகரும். ஒரு நாட்டின் இன்றியமையா நலங்களான கல்வி, செல்வம், ஆற்றல் முதலியவற்றை முறையே கலைமகள், திருமகள், மலைமகளாகவே மக்கள் உருவகித்து மகிழ்வர். நாட்டினையே தாய் நாடெனவும் புவிமகளென்றும், நாட்டு மொழியினைத் தாய் மொழியென்றும் நாட்டிற்கு நலமிக்க வளங்கொழிக்கும் நதிகளைக் கங்கை, யமுனை, காவேரி எனவும் பெண்களாக்கிப் பெருமையுறுவர்.

எத்தகைய ஆற்றலுக்கும் ஆக்கல், அழித்தல் (Constructive and Destructive) ஆகிய இருநிலைகளுண்டு என அறிவோம். கூரியவாள் காரையும் அறுக்கும் ஆருயிரையும் வவ்வும். கொழுந்துவிட்டெரியும் செழுந்தீ இன்னடிசிலை அட்டுந்தரும், நன்னகரை சுட்டும் அழிக்கும். இது போன்றே காத்தல் தொழிலுடையோர்க்கும், கண்ணோட்டம் போலவே வன்னெஞ்சும் தேவை என்பதை "கொல்லாமை" என்ற அரிய அதிகாரத்தை அமைத்த அதே வள்ளுவனார் மன்னன், கொலைவினைஞர் முதலியோர் மாட்டுச் சிறிதும் கண்ணோடாது வன்னெஞ்சுடன் ஒறுத்தல் வேண்டுமென்றனர்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

என்ற காவலனின் கடமையினைக் காற்றமற்றொழிலுடைய கடறனிடத்தும் காட்டுவாராயினர் பின்னர் வந்த பெரியோர்.

"ஆத்தாளை யெங்களபி ராமவல்லியை அண்டமெலாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க் கொருதீங்கில்லையே."

என்ற அபிராமியந்தாதியின் அரும்பாட்டொன்றில், புவியடங்கக் காப்பவளாதலால், இனிய கரும்புடன் கொடிய அங்குசபாசாங்குசம் முதலிய படைக்கருவிகளையும் தன் அழகிய கைகளில் கொண்டவளாகக் காட்சியளிப்பாள் எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுடன் திரிசூலம், வாள்,



கேடயம் முதலிய பலவற்றையும் ஒருவடிவில் அமைத்தற் பொருட்டே இயற்கைக்கு மாறாக இறைவியின் வடிவிலே எண்ணிறந்த கைகளும் ஏற்றப்பட்டன. இப்படி அம்பிகை, முதலியன 'சக்தி'யின் அமைதியான அறவடிவங்களாகவும், காளி முதலியவை அவளது மறவடிவங்களாகவும் கருதப் பெறும். விலங்கரசனான சிம்மமே அவளது ஊர்தியாகவும் அமையும்.

ஆதிசக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி போன்ற பலவகை வடிவங்கள் சக்திக்கு உண்டு. கொங்கு நாட்டிலே பொங்கு புகழுடன் விளங்கும் மாரியம்மனும் காளியின் மற்றொரு வடிவமேயாகும். 'கௌமாரி,' என்ற அம்பிகையின் பெயரின் முதற்குறையே 'மாரி' யென்றுங் கூறுவர். ஆயினும் "முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழை யேலோ ரெம்பாவாய்" என்ற மணிவாசகத்திற் கிணங்க மக்களது மண்ணுலக வாழ்வின் உயிர்நாடியான மழையினைப் பெய்விப்பவளும் அருள்மழையே ஆனவள் என்பதையே 'மாரி' எனும் பெயர் (மாரி=மழை) குறிக்கும் என்றலும் மிகப் பொருந்தும்.

இவ்வம்பிகையை வழிபட்டு அருட்பாடலியற்றியோர் எண்ணிறந்தவராவர். குறுக்குவழியில் பெருத்த பயனை அடைய விரும்புவதே மக்களியற்கை. ஒன்றரை ரூபாய் கொடுத்து ஒன்றரை லட்சம் பெறவும், திருமணத்தையே பெருவணிகமாக்கி மணத்தின் மூலம் பணக்குவியல் பெறவும் மக்கள் விழைவர். இத்தகைய மக்களின் மனப்பான்மையைத் தம் முள்ளத்தே கொண்டு தாயுமானாரும் "பதியும் நிதியும், புத்திரரும் மித்திரரும், பவிசும தவிசும், ஞானமாங்கதிரும் சதிரும், காய சித்திகளும் பெறலாம" என்று முதலிலே பெறக்கூடிய' பலன்களை யெல்லாம் பலபட விரித்துப் பகர்ந்துவிட்டுப் பிறகு இதற்கான குறுக்குவழி - சுருக்கு வழி - "கறையுண்ட கண்டர்பால் அம்மை! நின்தாளில் கருத்தொன்றும் உண்டாகுமேல்!" என்று முடிக்குந் திறன், சுவைத்து வியக்கத்தக்கது. இவ்வாறு பல நற்பலனையுமளித்து அடியவர் அகந்தை தீர்த்து அவர்தம் "மதியுண்ட மதியான மதிவதனவல்லியாய்" நிற்பவள் எனும் அடியில் அவள் அறிவுவடிவாய் விளங்குபவள் என்பது

தோன்ற அதற்கு முற்றிலும் மாறாக நம்நாட்டு மக்கள் பழம்புராணக் கதையொன்றையே சான்றாகக்கொண்டு அவள் வைசூரி அம்மை நோய்க்குரியவள் என்றும் ஆடு மாடு போன்ற விலங்குப்பலியை விரும்புகின்றவள் என்றும் கருதுவது எத்தகைய பேதைமை.

" பிணிகளுக்கோர் மாற்றுண்டு எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரீ
பேதைமைக்கு மாற்றில்லை எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரீ "

என்று பாரதியார் கூறுவதுபோல் அம்மாரியம்மையினிடமே முறையிடல் வேண்டும் ! இவ்வாறு தாயுமானார், சிவப்ர காசர். குமரகுருபரர், சிவஞான முனிவர், வீரை கவிராஜ பண்டிதர், அபிராமிபட்டர் முதலானோர் அம்பிகையைப் பற்றிப் பாடியுள்ள அருட்பாடல்கள் அனைவருள்ளங்களை யும் அவள்பால் ஈர்க்க வல்லன.

இத்தகைய சக்தியின் ஒரு கூறான சகலகலாவல்லியின் சக்தியாலே வடநாட்டிலும், தமிழின் சிறப்பை, மன்னர் மன்னனும் மாற்றானின் மாபெரும் அவையில் குமரகுருபர அடிகளார் நிலைநாட்டினர் என்று இலக்கிய வரலாறு எடுத் துரைக்கும். வீர அம்பிகையின் வடிவான துர்க்கையை வழிபட்டு வீரமும் வெற்றியுங் கண்டான் வீர சிவாஜி என்று வரலாறும் விளக்கிக் கூறும். அண்மையில் அவதரித்த அருளடியார் திரு. இராமகிருஷ்ணரும் சக்தி வழிபாட்டையே மேற்கொண்டனர் என்றும் அறிவோம். அமரகவி பாரதியாரும் பராசக்தியின் பெருமையெலாம் பக்திச் சுவையும் வீரச்சுவையும் திருந்திய முறையிலே பொருந்தப்பாடிய பாடல்களையும் பார்க்கின்றோம். படிக் கின்றோம்.

இறுதியாகத் தற்போது நிலைகலங்கி நிற்கும் இந்நில வுலகில் நின்று தவிக்கும் நாம், பாரதியார் " முத்துமாரி " என்ற பாட்டில் முறையிட்டது போல,

" உலகத்து நாயகியே எங்கள்முத்து மாரியம்மா
எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி



கலகத்தரக்கர் பலர் எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி
கருத்தினிலே புகுந்துவிட்டார் எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி
பலகற்றும் பலகேட்டும் எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி
பயனொன்று மில்லையடி எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி
நிலையொன்றும் காணவில்லை எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா
எங்கள் முத்துமாரி."

என்று அனைவரும் அம்மையின் அடிகளே அரணென்று சரண்புகுந்து அருளும் அமைதியும் அடைவோமாக !

---

# பேழ்கணித்தல்

டாக்டர். வ. ஆ. தேவசேநாபதி

சென்ற மார்கழியில் நடந்த சைவசித்தாந்த இளைஞர் மாநாட்டில், மாநாட்டுத்தலைவர் " பேழ்கணித்தல் " என்ற சொற்றொடரை எடுத்துக்காட்டி நம் சமய இலக்கியத்தில் இத்தொடர் பயிலுமிடங்கள் ஒன்றிரண்டைக் குறிப்பிட் டிருந்தார். " பேழ்கணித்தல் " என்பது சமய வாழ்க்கையில் நாம் மேற்கொள்ள வேண்டிய பழக்கம் என்றும் வற்புறுத்தி யிருந்தார். அவர் வெளியிட்ட கருத்தை வலியுறுத்துவது போல, நம் சமய இலக்கியத்தில் ஒன்பதாம் திருமுறையில் இத்தொடர் காணப்பெறுவதை நினைவூட்டுவதற்காக எழுந்தது இக்கட்டுரை.

முதலாவது " பேழ்கணித்தல்" என்ற இத்தொடருக்கு உள்ள பொருள்கள் சிலவற்றைப் பார்க்கலாம். "அஞ்சுதல்" என்ற பொருளில் இத்தொடர் சுந்தரர் தேவாரத்தில் அமைந்துள்ளது.

" பிறையணி வாள்நுதலாள் உமையாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க நீலமால்விடம் உண்டதென்னே"

" மருண்டு விழித்தல் " என்ற பொருளில் திருவாசகத்தில் யாத்திரைப்பத்தில் காணப்பெறுகிறது.

" நிற்பீர் எல்லாந்தாழாதே நிற்கும் பரிசேஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியன்பெருமானே "

" உறக்கமின்றிக் கண்மூடுதல் "—" அறிதுயில் " என்ற பொருளும் உண்டெனத் தெரிகிறது. உறங்குவதற்குமுன் கண்மூடி அன்றைய நிகழ்ச்சிகளை எண்ணிப்பார்க்கும்போது நம்முடைய செயல்கள், பிழைகள் எல்லாம் நினைவுக்கு வரக்கூடும். கண்மூடி நினைவு கூர்தலின் தொடர்பாகப் பிழை குறித்துச் சிந்தித்தல் என்ற பொருளும் தோன்றுகிறது.

"அரிதில் திறக்கத்தாம்பாட அடைக்கஅவர்பாடிய எளிமை
கருகி 'நம்பர்திருவுள்ளம் அறியாதயர்ந்தேன்' எனக்கவன்று
பெரிதும் அஞ்சித்திருமடத்தில் ஒருபால்அணைந்து பேழ்கணித்து
மருவும் உணர்வில் துயில்கொண்டார் வாய்மைதிறம்பாவாகீசர்."

" இறைவன் திருவுள்ளம் அறியாதயர்ந்தேன் " என்ற எண்ணம் ஏற்படவே வருத்தமும் அச்சமும் தோன்றுகின்றன. தவறு செய்தோம் என அதற்காக வருந்துகின்ற போது இறைவன் அருள் கூர்ந்து செய்த பிழையைப் பொறுத்துக்கொண்டு காட்சி அளிப்பார் என்பது இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக அப்பர் வரலாற்றில் காணப்பெறுகிறது.

ஒன்பதாம் திருமுறையில் வேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பாவிலும் இத்தகைய மனநிலைகளைப் பார்க்கிறோம். குறை இரத்தல், முறையீடு, பிழை உணர்ந்து உண்மையாக வருந்துதல் போன்றவை சமய வாழ்க்கையில் பெரிதும் காணப்படுபவை.

" துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே ஆளுகப்பார் " என்று வேணாட்டடிகள் திருவிசைப்பாவைத் தொடங்குகின்றார். எதற்காக இறைவன் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்றால் " கைச்சாலும் சிறுகதலியிலை வேம்பும் கறிகொள்வார் " என்று அன்றாட வாழ்க்கையில் காணப்படும் நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுகிறார். வாழைக்கச்சலும் கறிவேப்பிலையும் கறிசெய்வதற்கு உதவ



வில்லையா ? இவர் மனநிலை சுந்தரர் நிலையை நமக்கு நினைவூட்டுகிறது.

" அழுக்குமெய் கொடுன் திருவடியடைந்தேன் அதுவும்நான்
படப்பால தொன்றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்."

இழிவான செயல்கள் செய்தாலும் ஆண்டவன் பொறுத்துக்கொள்ளுவான் என்ற உறுதியினால் மெய்யன்பர்கள் தமக்கு வேண்டிய அவன் அருளை வற்புறுத்திக் கேட்கிறார்கள்.

" பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளமென்றது போலக்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமானோ வெனினும
இசையானோ வென்திறத்தும் எனையுடை யாளுரையாடாள்
நசையானேன் திருத்திலை நடம்பயிலு நம்பனே "

குளத்தில் நீர் நிறைந்துள்ளபோது அந்நீர் பொசிந்து அருகில் தாழ்வான இடங்களில் உள்ள பயிர் பச்சைகளுக்குச் செல்லும். அதுபோல குறைவிலா நிறைவாகிய இறைவன் திருவருளும் வழிந்தோடித் தாழ்வானவை செய்தவரிடத்தும் பாயும். ஆனால் இதற்காக அவர்களிடத்தில் இருக்க வேண்டிய பண்பு தம் தவறு இதுவென உணர்ந்து வருந்துதலால் ஏற்படும் தாழ்மை. கீழ்க்கொம்பு என்பது தாழ்மையை நினைவூட்டுகிறது.

இறைவன் அருளுக்குக் குறைவில்லை. அவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு நிலையானது—விலக்க முயன்றாலும் விலகாதது :—" உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது " என்பதை மெய்யன்பர்கள் உணர்வரேனும் இறைவனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பு அற்றதுபோலத் தோன்றினால் உடனே அவர்கள் கதறிக் கண்ணீர்விடத் தொடங்குகிறார்கள். இறைவனோடு மன்றாடுகிறார்கள். வேணாட்டடிகள் மனநிலையைப் பார்ப்போம்.

" என் தவறுகளை உணர்ந்து வருந்தி, இறைவனை நோக்கி அழைத்தாலும் அவன் இசையவில்லையே (பிழையுளன செய்திடினும் பொறுத்திடுவரென்றடியேன் பிழைத்தக்கால்......'உளோம். போகீரென்றானே" என்று சுந்தரர் கூறுவதோடு ஒப்பு நோக்குக.) எச்சார்வு மில்லாத எனக்கு இறைவனையன்றி வேறு யார் துணை ? தகப்பன் பராமுகமா

யிருந்தாலும் தாய் பரிந்தெடுத்துத் தகப்பனோடு நல்லுறவு கொள்ளச் செய்ய வேண்டுமே! அப்படியிருக்க அருட்சக்தியாகிய தாயோ எனக்காக உரையாட வில்லையே! மற்றச் சமயத்தவர் முன் இறைவன் என்னை இவ்வாறு விட்டுவிட்டால் இறைவனுக்குத் தொழும்பனான என்னை அவர்கள் இகழமாட்டார்களா? இறைவன் அருள் செய்யாத காரணத்தால் அவனை மறந்து விடலாம் என்று எப்போதாவது எண்ணினாலும் அவன் என்னை மறக்கவும் விடமாட்டேனென்கிறான். உயிர்கள் அனைத்துமே இறைவனுடைய மக்களாயிருக்க அவன் அகத்தியனார் போன்றவர்களுக்கு அருள் செய்வதும் மற்றவர்களுக்குச் செய்யாது விட்டுவிடுவதும் ஒரு மாட்டுக்குப் புல் இடுவது, மற்றொன்றுக்கு வைக்கோல் இடுவது என்பதைப்போல நடுவிகந்த செய்கையாயுளது. மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் கண்ணாகும் இறைவன் எனக்கு மட்டும் கண்ணாகாமல் போனால் நான் மிகக் கலங்கி "அண்ணாவோ!" என்று அண்ணாந்து அலமந்து விளித்தாலும் அவன் நண்ணாதிருக்கிறான். வாய் வாட, நாப்பிதற்றி அவனை நினைந்து நெஞ்சு உருகி நிற்கின்றேனே! அவன் அருள் சேரும் நாள் ஏதோ?

பேழ்கணித்தலுக்கு வேண்டிய உள்ளநிலை திருவிசைப்பாவில் உள்ள ஒவ்வொரு பாட்டினூடேயும் காணப்பெறுகிறது. உலகியல் நிலையில் நின்று உள்ளத்தை ஆராயும் உளநூல் வல்லாரும் நம்பிழைகளை நாமே நினைவுகூர்ந்து ஆராய்ந்தால் உளக் கோளாறுகள் நீங்கி உள்ள நிறைவு ஏற்படும் என்கிறார்கள். இம்முறைமெய்யன்பர்கள் எந்நாட்டிலும் எக்காலத்திலும்பின்பற்றி வந்ததொன்றே. நம்குறைகளை மறைக்காமலும் மறக்காமலும் மறுக்காமலும், இறைவன் திருமுன் எடுத்துக்காட்டி அவன் அருளுக்கு நாம் உரியவர்கள் என்ற உறுதியோடு அவன் அருளை வேண்டினால், குறைகள் நீங்கி நிறைவெய்தலாம். ஓவாதே அழைத்தால், "சாவாயும் நினைக்காண்டல் இனி உனக்குத் தடுப்பரிதே" என்று வேணாட்டடிகள் உறுதியாகக் கூறுகிறார். "இவன் எனைப்பல்கால் அழைப்பொழியான் என்று எதிர்ப்படுமே" என்று அப்பர் கூறவில்லையா? ஆகவே, இசைநோக்கிப் பேழ்கணித்துச் "சிவபெருமானே" என்றால் அவன் இசைவான்!

# விதியும் - பதியும்

க. ர. ஆதிலக்ஷ்மி யம்மையார்

விதியின் விளையாட்டில், வேதனையுறாத மக்கள், உலகில் இல்லை என்றே சொல்லலாம். விதி, ஆணை, சட்டம், நீதி, கட்டளை, ஊழ் என்ற பல சொற்கள் ஒரு பொருளைத் தருவன. விதியைப் பல்காப்பியங்களினும் முதன்மை பெற்ற 'தொல்காப்பியம்' 'பால்வரை தெய்வம்'', என்கிறது. விதியை நன்கு விளக்கக் கருதிய தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தனிப்பட்ட ஓர் இயல் வகுத்து, அதற்கு 'ஊழ்' என்ற தலைப்புத்தந்து 10 பாக்களில் அதன் தன்மையையும் வன்மையையும் நன்கு அறிவுறுத்தியுள்ளார். இத்தலைப்பினுக்கு உரைகண்ட பரிமேலழகர் "இஃது வினைப் பயன். செய்தவனையே சென்றடைதற்கேதுவாயது. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட்கிளவி" என்று விளக்கியுள்ளார்.

செய்தவரையே சென்றடைவது என்பதால் 'விதி' பிறர் கொடுக்கவந்ததல்ல. ஒவ்வொருவரும், தாமே தம் வினையால் தேடிக்கொண்ட தனிச்சொத்து என்பது புலப்படுகின்றது. தானே தேடியதைத் தானே அனுபவிக்க வேண்டியது நியதியே.

பிறவிதோறும் செய்து அனுபவித்தது போக எஞ்சி நின்ற வினைப்பயன் 'சஞ்சிதம்' என்று வடநூலும் 'பழவினை' என்று தமிழ்நூலும் கூறும். திவ்யப்ரபந்தத்தின் தேனென விளங்கும் 'திருப்பாவை'யை அருளிய ஸ்ரீ ஆண்டாள் மேற்கூறிய வினைப்பயனைப் "போயபிழை" என்று குறிக்கின்றார். கழிந்த பிறவிகளில் தேடிக்கொண்ட வினைப்பயன் என்பது அதன் கருத்து.

பிறவிதோறும் உயிருடன் ஒன்றிநின்று மக்களை ஆட்டுவிக்கும் வன்மையுடைய இவ்விதியினின்றும் விடுதலையுண்டா? உண்டாயின் அதற்கு வழி என்ன என்ற கேள்விக்கு "உண்டு" என்று உறுதி கூறுகின்றனர் சித்தர் பெருமக்கள்.

விதியின் வன்மையை ஒடுக்கி அதனை மாற்றியருள வல்ல பேராற்றலும் உயிர்களிடத்துப் பெருங்கருணையு

முடைய ஒப்பற்ற 'பதி' ஒருவன் உண்டு. அவனைக் 'கதி' என்று பற்றிய உயிர்கட்கு "விதி"யினின்றும் விடுதலை உண்டு என்று அறிவுறுத்திய அருள்வள்ளல்கள் திருவாக்கின் பெருவெள்ளத்தில் சிறு வலைகளை சுருங்கிய அளவில் ஞாபகப் படுத்துவதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியனார் 'பதி'யைக்கடவுள் என்கிறார்.'கடவுள்' என்றசொல்லுக்குஎல்லாவற்றையுங்கடந்து நிற்பது,எல்லாவற்றிலும் உள்ளிருந்து செலுத்துவது, என்று மேலோர் பொருள் கொண்டுள்ளார். விரிவை நூல்களிற் காண்க. திருவள்ளுவர் "ஆதிபகவன்" வாலறிவன்', 'மெய்ப்பொருள்', 'செம்பொருள்', எனப் பல சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுச் சொற்களால் கூறியுள்ளார். அதுவன்றிக் 'கடவுள் வாழ்த்தின் 9 வது பாட்டில் "எண்குணத்தான்" என்று சைவசித்தாந்தக் கருத்தை முழுவதும் கொண்ட சிறப்புப் பெயர் ஒன்று காணப்படுகின்றது. 'தன்வயத்தனாதல்' தூயவுடம்பினனாதல் இயற்கை உணர்வினனாதல், முற்று முணர்தல், முடிவிலாற்றலுடைமை,வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருளாண்மை, ஆகிய எண் குணங்களும் உரையாசிரியரால் பேசப்படுகின்றன. அவைகள் பொதுவாகக் கடவுள் தன்மையை விளக்குவனவாக அமைந்துள்ளன. அவற்றுள் பேருளாண்மை என்ற ஒன்று சிறப்பாக உயிர்களின் பொருட்டே அமைந்து கிடக்கின்றது. இவ்வருள் திறனை அறிந்து உணர்ந்த ஒவ்வொரு ஆன்மாவும், தன்னை மறந்து தன்னாமங்கெட்டு தலைவன் தாளில் தலைப்பட்டு நிற்கின்றது.

"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றினும் மற்றுஅவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி – அதுவே போன்றிருந்தேனே"

"வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல நோயாளன் போல் மாயத்தால்
மீளாத்துயர்தரினும்.........ஆளா உனதருளே பார்ப்பன்"

என்றும் தலைவன்பால் தனக்குள்ளகாதலைக்குலசேகராழ்வார் திவ்யப்ரபந்தத்தில் வெளியிடுகிறார். தாயின் கடுஞ்சினமும் மருத்துவரின் கொடுஞ்செயலும் உண்மையில் துன்பத்தை உணர்த்திற்றில்லை. அவர் தம் அருளை மேலும்



மேலும் பெறுவதற்கு விழைந்து நிற்பதே காரணமாகின்றதுபோலும். நீற்றறையில் விளைந்த வெப்பக் கொடுமையையும் மறக்கச் செய்தது அப்பர் பெருமானின் அருள் வேட்கை. அருள்வடிவாம் அன்னை புனிதவதியாரை என்புருவிலும் வாழச் செய்தது இடையறா இறையன்பு. உறுப்புக்களிற் சிறந்த கண்களையும் இழக்கத்துணிந்தது கண்ணப்பரின் கட்டற்ற காதல்.

நாதன்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுகின்றவர்தம் பொறி புலன்கள் தம் வசமழிந்து, தலைவனின் ஈடற்ற இணையடிகளில் படிந்துவிடுகின்றன. இதை வைணவர்கள் 'சரணாகதி' தத்துவம் என்றும், சைவர் "தாடலை" (தாள் + தலை) நியாயமென்றும் கூறுவர். இறைவன் தாளில் உயிர்களின் தலை சேர்ந்து ஒன்றும் நிலையே "போகம்" எனப்படுகின்றது. இந்நிலையில் செயற்கருஞ் செய்கைகள் கைகூடுமாயினும், அச்செயல்களெல்லாம், தவச்செயலாகவே விளங்கும்.

சித்தம் சிவமாகில் செய்வனவே தவமாகின்றது. இங்கு சிவமாதல் அன்புமயமாதல். அனுபூதிச் செல்வராகிய அருணகிரியார் கந்தரனுபூதியுள் "சுரபூபதியே விதிகாணும் உடம்பை விடாவினையேன கதிகாண மலர்க்கழலென்றருள்வாய்" எனவேண்டி நிற்கின்றார். அவர்தம் அடிகளைப் பின்பற்றி "விதி"யினின்றும் விடுதலை பெறுதற்குப் "பதி"யின் கழல்களே "கதி" என்ற உறுதியோடு ஈடுபடுதற்கு இறைவன் நமக்குத் தந்த "மதி"யைப் பயன்படுத்தி வெற்றியும் பெறுவோமாக.

---

# திருநீலகண்ட நாயனார்

M. P. தியாகராஜன், பி.ஏ.

புராணங்கள் உண்மைத் தத்துவங்களைக் கதாரூபமாக விளக்க வந்தவையானபடியினால் அவற்றுள் அடங்கிய தத்துவக் கருத்துக்களை உணர்ந்து படித்தல் நல்லது என்ற நோக்கத்துடன் சில உண்மைத் தத்துவங்களைத் திருநீலகண்டர் புராணவாயிலாக ஈண்டு விளக்குவாம்.

“மாது சொன்ன சூளால் இளமை துறக்கவல்லே னல்லேன்” என்று பட்டினத்தடிகளும் பாராட்டிடத்தக்க துறவு ஒழுக்கத்தைப்பூண்டு இல்லறத்தில் வாழ்ந்தவர் திருநீலகண்டர். அம்பலக்கூத்தன் கழல்களை வாழ்த்தி வழிபடும் நலத்தில் பொய்கடிந்து அறநெறியில் வாழ்க்கையை நடத்தி வந்தமையால் சித்த சுத்தி ஏற்பட்ட நிலையில் திருநீலகண்டருக்கு வந்த அனுபவம் யாது என நோக்குமிடத்து அவருடைய கற்புடைய பத்தினியின் உபதேச மொழிகளே என்பது விளங்கும். செல்வத்தினிடத்துள்ள பற்றைப் பட்டினத்தடிகளுக்கு நீக்க மருதவாணர் “காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே” என உபதேசித்துச் சென்றனர். இங்கு இவ்வடியார் பெற்ற உபதேச மொழி “தீண்டுவீராயின் எம்மை திருநீலகண்டம்” என்பது. இது அவர் மனத்தில் பூர்வசம்ஸ்கார வசத்தால் பொதிந்து கிடந்த மாதர்பற்றை யொழிக்க நேர்ந்த அனுபவம் எனக் கொள்ளல் வேண்டும். உபதேச மொழியென்பது ஏதோ மந்திரம் சற்குருவினிடத்துப் பெற வேண்டுவது என்று எண்ணுவது இயல்பு. இவைபோன்ற அனுபவம் தாம் வேண்டிப் பெறுவது. ஆனால் திரு அருள் கூட்டுவிப்பது, தன் சுதர்மத்தைச் செய்து வருங்கால் பக்குவப்பட்ட நிலையில் நம்மை இருந்த இடத்தில் ஆட்கொள்ளும். இதுவே அருணகிரியார் உபசேமாகும்.

“தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியை, தானமென்று மிடுங்கோள், இருந்தபடி யிருங்கோள் எழு பாரும் உய்யக் கொடுங்கோபச் சூருடன் குன்றந்துளைக்க வைவேல் விடுங்கோன் அருள் வந்து தானே உமக்கு வெளிப் படுமே.” அப்படி யார் வாயிலேனும் இறைவன் கூட்டுவிக்கும் உபதேசமொழிகள் வாழ்க்கையைத் திருத்தவல்லன. அப்படிப்பட்ட உபதேசத்திற்குப் பின்னரே வாழ்க்கை பண்படுத்தப்பட்டுத் தன் புகழ் கெடுவது போன்ற நிலையில் திருவருள் விலாசம் காணப்படுகின்றது. தன் புகழ் கெடுவது என்பது தன் அகங்காரம் அடியோடு கெடுவதேயாகும். அதே விதம் பல்லோர்முன் திருநீலகண்டரை இழிவுபடுத்தியதின் நோக்கம், தன்னுடைய அறநெறியில் அவர் சிறிது புகழும் பெருமிதமும் கொண்டிருப்பின் அதுவும் அற்றுப் போக வேண்டும் என்பதே. கருத்தாகும். எனவே



தொண்டரை விளக்கங்காணவும் அவர் நெறியை விரும்பி ஞாலம் உய்யவேண்டும் என்ற கருணையோடும் ஆண்டவன் அருட்சிவயோகியராய் அவர் இல்லம் அடைந்தனர். ஆன்மாவிடத்திலிருந்து மும்மலங்கள் எவ்விதம் கழுவப்படுகின்றன என்பதையும் சிந்தித்தல் நல்லது. மற்றும் அயலறியாமை நிலையில் தம்பதிகளிருவரும் வேறுவைகி வாழ்ந்தனர் என்பது ஒரு சிறந்த கருத்தாகும். எந்நெறியும் அவ்விதம் பழகல் வேண்டும். பிறர் புகழ நந்நெறியில் வாழ்வாங்கு வாழ்வது ஒரு பயனும் தரவல்லதன்று.

எனவே திருநீலகண்டர் திருஓடு அடியார்களுக்குக் கொடுத்து உதவுவது ஒரு நன்மையென அவ்வொழுக்கத்தை மேற்கொண்டார். அந்தச்செய்கையின் வாயிலாக அவருக்கு அடியார்களை ஓடு தந்து காக்கின்றேம் என்ற எண்ணம் படிவது இயல்பு. செய்கைகளே மனதில் அனுபவ வாயிலாக சம்ஸ்கார வினைகளாகப் படிகிறது. ஆக ஆண்டவன் அவ்வடியாரிடம் ஒரு ஓடு தந்து அதை “நீ தருக நாம் வேண்டும்போது” என்று விளித்துச் சென்றனர். பிறருக்கு ஓடு தந்து உதவியவர் கொடுத்த அந்த ஓட்டைக் காப்பாற்ற வன்மையிலர் என்றதை உணர்த்த வந்தது போல் தோன்றுகிறது. ஆக அவனுடைய அருளினாலன்றி ஆன்மாவிற்குத் தனிப்பட்ட செய்கை நன்மையதோ தீமையதோ இல்லையென்பது அவ்வடியார் ஓட்டைக் காணமல் திகைத்த சமபத்தில் ஏற்பட்டிருக்குமல்லவா? தான் மேன்மையாகக் கொண்ட ஒழுக்கம் அவன் முன்னிலையில் பயன்படவில்லையல்லவா? சிறந்த ஓட்டைக் கொடுக்கும் ஆற்றலை ஆண்டவன் போற்றாது தான் வைத்த ஓட்டை மீண்டும் அளிக்க வேண்டுமென்றார். அங்கு திருநீலகண்டர் “தான் உரைப்பதொன்றின்றி” நின்றாரல்லவா? “தற்போதம்” அங்கு களையப்பட்டது என்று கொள்வதே கருத்தாகும். ஆங்கு உலகம் ஈசுவரனுடைய மாயையினால் தோற்றல் மறைதலாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு ஆன்மாக்களிடத்திலுமுள்ள மலங்கள் நீங்க அன்பெனும் ஓடு தந்துள்ளான். அதை மறைத்துவிடுகிறோம். அதனால் இன்னல்களுக்கு ஆளாகிறோம்.

கடைசியாக அவர்களுக்கு இளமையை ஏன் மீண்டும் தரல் வேண்டுமென்று நோக்குமிடத்து, அவர் ஒரு வைராக்

கியத்தின் கட்டுப்பாட்டிற்காகப் புலனடக்கத்தை மேற் கொண்டிருந்தது அவ்விச்சை அறவே ஒழிவதற்கு ஏது வல்ல என்ற காரணங்கொண்டு அவர் தெளிந்த நிலையில் இளமையிலும் சரீரப்பற்றிலும் வெறுப்புத் தன்மையின்றி, விருப்பற்ற தன்மை வரவேண்டுமென்று, பயன்படுத்தாது போக்கின இளமையை மீண்டுந் தந்து அதனைப் பயன் படுத்தவேண்டுமென்ற அவசியத்தையும் நீக்கி ஆட்கொண்ட வாறு எனக் கொள்ளல்வேண்டும். "நம்பால் என்றும் இவ்விளமை நீங்கா விருப்புடன் இருக்க" என ஆசி கூறி ஞர். மும்மலங்களோடு கூடிய உடல் மூப்பெய்தும். அரு ளால் பெற்ற உடல் அழியாது.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆன்மாவின் பண்பாட்டிற்காக ஆண்டவன் சில சில சூழல்களை அமைத் துத் தருகிறுன். அவை நம் பண்பாட்டிற்கு ஏற்பட்டவை என்பதை மனதிற் கொண்டு ஆண்டவனைப் போற்றுதல் செய்தல் வேண்டும். ஏற்பட்ட சூழல் நமக்கு விரும்பத் தக்கதாக இல்லை என்ற காரணத்தினுல் சூழலைத் திருத்தி யமைக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திப்பது அறியாமையாகும் என்ற முக்கிய உண்மையைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ஆண்டவன் "நன்றுடையான் தீயதிலான் நரை வெள்ளேறுடைய தர்மசீலன்." ஆக அவன் ஒருபோதும் நமக்குத் தீமை புரியமாட்டான் என்ற உறுதியான நம்பிக்கையோடு ஆண்டவனைத் தொழுதல் வேண்டும். அவனுடைய குறிகளும் அடையாளங்களும் அப்பான்மைகளையே உணர்த்த வல்லன.

## கோலாலம்பூர் சைவப் பெண்கள் மகாநாட்டுத் தலைமை உரை

### அன்னலக்ஷ்மி சுந்தரம் அவர்கள்

அறிவும் அன்பும் நிறைந்த சகோதர சகோதரிகளே, வணக்கம் பல.

இன்று சைவ சித்தாந்த மாநாட்டின் சைவ மங்கையர் பகுதியில், தலைமை வகிக்கும் பணி தந்தீர்கள். இறைவ னுக்கு வணக்கம் செலுத்தி, இப்பெரும் பணியை ஏற்றுக் கொண்டேன். "என்கடன் பணி செய்து கிடப்பதே"



இறைவன் கடமை என்னைத் தாங்குதல், பெரியோர்களாகிய உங்கள் கடமை யான் இப்பணியும் செய்யும் பிழை பொறுத்தல்.

இங்கு கூடியிருக்கும் அனைவரும் சைவமக்கள். பெறுவ தற்கரிய மானிடப் பிறவியை நாம் பெற்றது முதல்பாக் கியம். எத்தனையோ கீழ்ப்பிறவிகளில் பிறவாமல் இப் பிறவி கிட்டியது. சைவசமயத்தில் பிறந்தது அதனினும் பாக்கியம். "புறச்சமய நெறி நின்றும் அகச்சமயம் புக்கும் புகல் மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறை கள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலை கள் பல தெரிந்தும ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத் திறத்தடைவர்" என்று அருணந்தி சிவாசார்ய சுவாமிகள் சொல்லியதைக் காண்க. வாய்த்தற்கரிய இப்பிறவியில் நாம் செய்ய வேண்டுவது என்ன ? மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம் ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காகவன்றே வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனை அர்ச்சிப்பர் ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ !

மனம் வாக்கு காயம் எனும் திரிகரணங்களாலும் பஞ்சகவ்வியங்களால் அபிஷேகம் செய்யப்படுகின்ற அரனை வழிபடுதற்கே இப்பிறவியேற்பட்டது. தேவர்களும் இம் மண்ணுலகத்தில் வந்து இறைவனை அர்ச்சித்து அருள் பெறுவர். ஊன் நிறைந்த உடலைத் தாங்கியவர்கள் இதனை உணரவில்லை.

இறைவனை வழிபடுவது நம் நன்றியறிதலைக் காட்டுவ தற்காக, அமைதி யடைவதற்காக, வீடு பெறுவதற்காக, நாம் கேட்காமலேயே நமக்கு வேண்டிய பொருள்கள் பலவும் உலகில் படைத்த ஈசனுக்கு, நன்றி செலுத்த வேண்டாமா? தூயவாழ்வு வாழவும் தெய்வ சிந்தனை அவசியமே. உள்ளன் புடன் இறைவனை நாள்தோறும் சிந்தித்து விரதமிருந்து ஒரு நெறிய மனம் வைத்து உணர்ந்தால், தாமாகவே தெய் வீகப் பண்புகள் நம்பால் வந்தடையும்.

பழம், பாக்கு, வெற்றிலையுடன் ஆலயம் சென்று வலம் வந்து ஆண்டவனை வணங்கி, அர்ச்சகரிடம் நம் பெயர்களை எடுத்துக்கூறி, அர்ச்சனைகள் பல செய்து வேண்டியவற்றை

இறைவனிடம் இரந்து கேட்டு வீடுதிரும்பினால் மாத்திரம் இறைவனை வழிபட்டு வருவதாக எண்ணலாகாது.

ஏனெனில் அங்கு நிற்குமட்டும் இறைவனை நினைந்து, வீடு திரும்பியவுடன் வீட்டு விவகாரங்களில் ஈடுபட்டு விடுவோம். அப்படியின்றி எந்நேரமும் எச்செயலிலும் இறை நினைவு சதா இருந்துகொண்டே யிருக்கவேண்டும். செய்யும் செயல் எல்லாம் இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்யவேண்டும்.

தவறுகளும் வெறுப்பும் நாஸ்திகமும் பரப்பப்பட்டு வரும் இந்த நாளில் சைவத்தொண்டு மிக அவசியம். பெரிய புராணம் இதற்கொரு வழிகாட்டி, அதில் கூறப்பெற்ற ஒவ்வொரு அடியாரும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர், குறிக்கோள் கொண்டவர், அதற்கு இடையூறு வந்த காலத்தில் பல தியாகங்களைச் செய்தவர், செயற்கரிய செய்த அவர்களே பெரியார். உலகம் உள்ள அளவும் போற்றப்படுவார்கள்.

சமயத்தொண்டு ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் அதில் சம உரிமை உண்டு. சமமான பொறுப்பும் கடமையும் உண்டு. காரைக்காலம்மையாரின் தூய வாழ்க்கையை ஊன்றிப் பாருங்கள். அன்பாலும் அருளாலும் தன் கணவனைத் திருத்தினார், அவன் பரம்பரையைத் திருத்தினார், அவர் திருப்பாட்டுக்களாலும் வாழ்க்கையாலும் நம்மைத் திருத்துகிறார். தாயும் தந்தையு மில்லாத் தனியோனுக்கு அன்பு அருளுநெஞ்சத்தவர் அம்மையானார்.

எங்கள் பெருந் தெய்வமாகிய மங்கையர்க்கரசி மன்னனாகிய மணவாளனைத் திருத்தியவர். பல இன்னல்களுக்கு இலக்கான பாண்டி நன்னாட்டைச் சீர்பெறச் செய்தார், சைவத்தைக் காப்பாற்றினார், சீர்காழிச் செல்வருக்குச் சிறந்த தொண்டைக் கொடுத்தார்.

திருநாவுக்கரசை சமண சமயத்திலிருந்து சைவத்திற்கு ஈர்த்த பெருமை அவரது தமக்கையாகிய திலகவதியாருக்கே சேர்ந்தது. அருமைத்தம்பி மனம் தொண்டில் திளைத்தது அந்தப் புண்ணியவதியால்.

திலகவதியாரிடத்தில் தியாகத்தைக்காணலாம். இவரது தாய் தந்தையரிறந்தும், தனக்கு மணவாளனாகக் குறித்த



வரும் இறந்தும், தமது தம்பியாகிய மருள்நீக்கியாருக்காக உயிர் தாங்கியிருந்து சமண சமயத்தில் புகுந்திருந்த மருள் நீக்கியாருக்கு, மன இருளை நீக்கிச் சைவ சமயத்தில் புகச் செய்து அவராலே சைவ சமயத்தைத் தழைத்தோங்கும் படி செய்தார். இவர்களால் அல்லவா அப்பர் தேவாரம் நமக்குக் கிடைத்தது.

மேருமலையன்ன தவத்தையுடைய சங்கிலியாரும், பரவையாரும் சுந்தரரோடு இல்லறம் நடாத்தி அவருக்குத் துணையானார்கள்.

பெரியபுராணத்தில் கணவனுடன் அறநெறிநின்ற மாதரசிகள் பலர். உண்டி வழங்குவதில் உதவினார் இளையான் குடிமாற நாயனார் மனைவி; இளமை துறப்பதில் சரிபங்கெடுத்தார், திருநீலகண்ட நாயனார் மனைவி; மகவை அரிவதில் மனத்துணிவு கொண்டார் சிறுத்தொண்ட நாயனார் மனைவி. அவர்கள் யாவரும் நமக்கு வழி வகுத்து விட்டவர்கள்.

ஆண்களைவிடப் பெண்களின் கடமை பெரிது. செயலற்றிருக்கும் சிவத்தைச் செயல்புரியத் தூண்டுவது அதை விட்டுப் பிரியாதிருக்கும் சக்திக்குரிய தன்மையன்றோ? சிதம்பரத்தில் அம்மைகாண ஐயன் ஐந்தொழிற் கூத்தாடுகின்றான்.

ஒரு குடும்பத்தின் வாழ்வும் தாழ்வும் அக்குடும்பத் தலைவியினிடமுள்ளது. அதனால் அவள், இல்லாள் மனையாள் வாழ்வரசி வாழ்க்கைத் துணைநலம் சகதரும சாரிணி என்றெல்லாம் பெயர் படைத்துள்ளாள். அறிவுள்ள நல்ல பெண், தன் குடும்பத்தை வாழ்விப்பாள். தன் கணவன், குழந்தைகள் உடலையும் உள்ளத்தையும் பாதுகாப்பாள், குடும்பக் கடமைகளாயுள்ள பிறவற்றையும் செய்வாள். “தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்” என்றது வேத வாக்கு.

ஆகையால் இக்காலப் பெண்களுக்கும் சைவம் வளர்க்கும் பணிதேவை. இல்லறம் சமய வாழ்க்கைக்கு இடையூறு அன்று. “அறத்தாற்றின் இல்வா[illegible]ின் புறத் தாற்றிற் போஒய்ப் பெறுவது எ[illegible]

186910.

இல்லறத்திலிருந்தே முக்தியடைந்த நம் தாய்மார்கள் பலர் இல்லறத்தின் பெருமையை மக்களுக்குக் காட்டவே நம் முழு முதற்கடவுளும் அம்மை அப்பனுகத் திருவுருவங் கொண்டதும் திருமணம் புரிந்து கொண்டதும். இதனை உணராது சிலர் இகழ்ந்துரைப்பர் என்பதை அருணந்தியார் அழகாய்க் கூறுவர்.

" போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதல்ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும்ஓரார்
வேகியாளுற் போற்செய்த வினையினை வீட்டல்ஓரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பருள் ஒருவன்என்பர்."

பெண்கள் முன்னேற்றம் அடைந்த நாடுதான் நாகரிகமானது என்று கூறுவர். இப்பொழுது நாகரிகம் பரிதாபகரமான நிலையிலிருக்கிறது. நாம் போகப்பொருள்போல் நடத்தப்படுகிறோம். தூய ஆடைக்குப் பதிலாக பகட்டு ஆடையில் மனம் வைக்கிறோம். நெற்றியில் நீறணிவதற்குப் பதிலாக உதட்டிலும் கன்னங்களிலும் சாயம் பூசிக்கொள்ளுகிறோம். கைக்கு ஆபரணம் புத்தகம் என்று கொள்ளாமல், பலவித பைகளைத் தோளிலும் கைகளிலும் தூக்குகிறோம். இதுதானு நாகரிகம் ?

பையப் பையப் பைய விட்டு விட்டு, திருவாசகத்தைக் கைக்கொள்ளவேண்டும். சிகப்புச் சாயம் உதட்டில் பூசுவதற்குப் பதிலாக, ஐந்தெழுத்தைச் செபிக்க வேண்டும். அத்துடன் உள்ளத்தூய்மை உயர்ந்த தாய்மை நிறைந்த தெய்வபக்தி இவையே நாகரிகம்.

ஒரு குழந்தையை நல்லவனுகவோ கெட்டவனுகவோ வளர்க்கக்கூடிய சக்தி தாய்மை திகழும் பெண்ணுக்குண்டு. குழந்தைக்குப் பாலூட்டும் பொழுது நல்லெண்ணத்துடனும், தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் பொழுது தேவார திருவாசகங்களைப் பாடியும், அன்னம் அளிக்கும் பொழுது சிறிய கதைகளைச் சொல்லியும் வளர்த்தல் வேண்டும். வீட்டு வேலைகள் முடிந்த நேரங்களில் சிறுவர்களுக்குத் தேவார திருவாசகங்களைச் சொல்லிக்கொடுத்து அவர்களின் இதயத்திலே இறைஒலி வீசும்படி செய்யவேண்டும்.

சில பெண்கள் "நம்மால் என்ன செய்ய முடியும்" என்று நினைக்கலாம், சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்



என்ற பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். சேது
பந்தனம் கட்டச் சிறு அணிலும் இராமபிரானுக்கு உதவி
யது என்பதில் பெரிய உண்மை இருக்கிறது. ஆகையால்
நம் பணியும் சமயம் பரப்புவதற்குத் தேவை. நம் உதவி
யின்றிச் செயல்கள் சீர்பெற முடியவில்லை என்று சொன்
ஞல், அது நாம் பெருமைக்காகப் பேசும் பேச்சல்ல.
பெண்மை ஆக்கத்திற்கு அடையாளம் என்று சாஸ்திர
நூல்கள் கூறும்.

நம்பணி முதலில் நமக்கே இருக்கலாம். சைவகுடும்பத்
திற் பிறந்த பெண்ணே ஆணே தேவார திருவாசகங்களை
அறியாமல் இருந்தால் அவர்களை நாம் எப்படிச் சைவர்க
ளென்று கூறமுடியும் ? பொருளோடு சில திருப்பாட்டுக்
களை நாம் படித்துக்கொள்ள வேண்டும், சைவ சமயம்
இன்னது என்று உணர்ந்து கொள்ளவேண்டும், நம் ஆற்ற
லுக்கு ஏற்ப நாம் இத்துறையில் பல விஷயங்களைத் தெரிந்து
கொள்வது அவசியம். அதனுல் நம் மக்களுக்கும் ஏனைய
சுற்றத்தாருக்கும் அருள்நெறி புகட்டத் தகுதியடைகிறோம்.
நம்மைப் பார்த்துப் பலர் நம் வழி நிற்கக்கூடும். கற்றும்
கேட்டும் நம் சமய அறிவை விருத்தி செய்துகொள்ளலாம்.

ஓதல் பெரும்பணி ஓதுவித்தல் அதனினும் சிறந்தபணி.
சில பிள்ளைகளுக்கேனும் வாய்ப்புக் கிடைத்தபோது சொல்
லிக் கொடுக்கவேண்டும். இக்கொடையால் நமக்குக் குறை
வது ஒன்றில்லை. " ஞானநூல்தனை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்று ஈன
மிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி
அடைவிக்கும் எழில் ஞானப்பூசை " என்னும் சித்தியார்
பாடலால் பணியின் பலன் விளங்குகிறது. சாஸ்திரப்
பணியோடு அன்புப் பணியும் அவசியம். " அன்பர் பணி
செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே
வந்தெய்தும் பராபரமே " என்றார் தாயுமானுர். ஏழைக்கு
அன்னமிடல் பசுவுக்கொரு வாயுறை மெலிந்தோர்க்கு
மெய்ப்பணி முதலியன அன்புத் தொண்டுகளாகும். அன்பு
நிறைந்த தாய், தன் அன்பால் சிறு குற்றேவல்களை மக்க
ளுக்குச் செய்து அவர்கள் உள்ளத்தைக் கொள்ளை
கொண்டு அரசு செலுத்துகிறுள். அதேபோல, சைவ அரசி
யலை நிலை நாட்ட சைவமங்கையர்கள் பலதுறைகளில் பணி

செய்யவேண்டும். கிறிஸ்து மதம் பரவியதற்குக் காரணம் அவர்கள் செய்யும் சிறந்த சேவையே. நம்முன்னோர்களும் இம்மாதிரிப் பணிகளைச் செய்து காட்டியிருக்கிறார்கள். சைவப் பெண்களின் தினசரி வாழ்க்கையே இறைவாழ்க்கையாக முடியவேண்டும். வாழ்க்கையில் தெய்வமணம் கமழவேண்டும் பெண்கள் சோம்பல் உள்ளவர்களாக இருக்கப்படாது. சோம்பல் உள்ள பெண் வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் கணவனையும் குழந்தைகளையும் கவனிப்பதற்கும் முடியாமல் போய்விடும்.

வைகறையில் துயில் எழுந்து வீடு சுத்தம் செய்து, பாத்திரங்களை விளக்கி, தேக சுத்தி செய்துகொண்டு குடும்பம் முழுவதும் ஓரிடத்திலிருந்து பிரார்த்தனை செய்து பத்து நிமிஷமாவது தியானம் செய்வது மிகவும் நல்லது. அதன்பின் காலை ஆகாரம் முடித்துக்கொண்டு, பகல் போசனம் தயார்செய்யவேண்டும். இரண்டு மூன்று பெண்கள் ஒரு வீட்டில் இருந்தால் வேலைகளைப் பங்கிட்டுச் செய்வது நலம். போசனம் தயாரிக்கும் பொழுது நல்லெண்ணத்துடன் செய்யவேண்டும் பகல் போசனம் முடிந்ததும் அரை மணி நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு, பின் நல்ல நூல்களைப் படிக்கலாம், ஒருவர் படிக்க மற்றவர்கள் கேட்கலாம், சிறுவர்களுக்குத் தேவாரம் திருவாசகம் சொல்லிக் கொடுக்கலாம். மாலை ஆறுமணிக்கெல்லாம் உடம்பைச் சுத்தம் செய்துகொண்டு குடும்பம் முழுவதும் சேர்ந்து பிரார்த்தனை செய்யலாம். பின் இராப்போசனம் முடிந்ததும் கொஞ்ச நேரம் தியானம் செய்து இறை நினைவோடு சயனிக்கவேண்டும். இப்படியாக தினசரி நடந்தால் தெய்வமணம் கமழும்.

தாய்மார்களே ! இச்சமயம் இருக்கும் காலப் போக்கை ஓரளவேனும் உணர்வோர், சமயத்தொண்டு மிக அவசியமென்று ஒப்புக்கொள்வர். சமாதானம் நிலவ வேண்டுமானால் ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்தாக வேண்டும் திட்டம் வகுக்கவும், தெளிவு பெறவும் பேச்சுக்கள் தேவை. அப்பேச்சை ஒட்டிச் செயலும் சேர்ந்து வரவில்லையானால் பேச்சு பயனற்றதாய்விடுகிறது. ஆகையால் அருள் வாழ்க்கை வாழ நெறிவகுப்போம். அண்ணல் அருள் புரிவான்.

---

# சர் பொன்னம்பலம் அருணாசலம்.

வட்டுக்கோட்டை நாகலிங்கம்

சர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் நூற்றாண்டு விழா சென்ற ஆண்டு எங்கணும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இப்பெருமகனார் இறைவன் திருவடி நீழல் எய்திய நாளையே இன்றும் கொண்டாடுகிறோம். இப்பெரியார் ஒரு சிறந்த தேசத்தொண்டராயும், நாட்டு முன்னேற்றத்திலும், சமுகச்சீர்திருத்தத்திலும் கண்ணும் கருத்துமாகவிருந்த ஒருபெரு இலட்சியவீரராயும் விளங்கினாராதலின், அவரது நாளைக்கொண்டாடவேண்டுவது இன்றியமையாததாயிற்று. நமது நாடுபெற்ற சுதந்திரத்திற்கு வித்திட்டவர்களுள், இவரே தலைசிறந்துவிளங்கினார். இத்தகைய பெருமகனாரின் பண்பட்ட வாழ்க்கை, அவர் மேற்கொண்ட இலட்சியங்கள், அவரது சமயஞானம், அரசியற் கொள்கைகள் முதலாயின நம் நாட்டுத்தொண்டர்க்கு ஒரு பெரும் எடுத்துக்காட்டாக அமைந்து நம்மக்கட்குப் புத்துயிரளித்து வருகின்றனவல்லவோ ?

சர். பொன்னம்பலம் அருணாசலம் 1853ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ந் திகதி யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மானிப்பாயின்கண் ஓர் உயர்ந்த குடியில்தோன்றினார். அவருக்கு குமாரசுவாமி, இராமநாதன் என்னும் இரு சகோதரர் இருந்தனர். இவரே மூன்று சகோதரருள் இளையவர். இவருடைய தாய்வழிப்பேரன் குமாரசுவாமி முதலியார் என்பவரே சட்டசபை முதன்முதல் தோற்றிய போது. அதில் முதல் தமிழ் அங்கத்தவராக பதவி வகித்தார். இவரின் தாய்மாமன் சர். முத்துக்குமாரசுவாமி என்பவர் சட்டநூற்கல்வி பயின்று 'பாரிஸ்டர்' ஆனார். அவர் இலங்கைச் சட்டசபையில் பல ஆண்டுகளாக ஓர் அங்கத்தவராக இருந்து, நைட் பட்டம் பெற்ற முதலாவது தமிழராவர். இம்முத்துக்குமாரசுவாமி என்பவரின் புதல்வரே கலாயோகியாய் விளங்கிய காலஞ்சென்ற ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள். இவ்வறிஞர் நமது கலைகளைச் செவ்விதின் ஆராய்ந்து அவற்றின் தத்துவங்

களையும் நுட்பங்களையும் விளக்கும் பல நூல்கள் ஆக்கி
யிருக்கின்றார்கள்.

சர். முத்துக்குமாரசுவாமி என்பவரின் கண்காணிப்
பிலேயே நமது அருணாசலமும் அவர்தம் சகோதரர்கள்
குமாரசுவாமி இராமநாதன் என்னும் இருவரும் வளர்ந்
தனர். அருணாசலம் அவர்கள் இப்போது றுயல் கல்லூரி
யென்று அழைக்கப்பட்டு, அக்காலத்தில் 'றுயல் அக்கடமி'
எனப்பெயர் பெற்ற கல்லூரியிலே கல்விகற்கத் தொடங்
கினர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்னும்
முதுமொழிக்கிணங்க, அருணாசலம் அவர்கள் வகுப்பிலே
சிறப்புற்றோங்கி, ஆசிரியன்மாரின் நன்மதிப்பையும்
பாராட்டலையும் பெறுவாராயினர். இக்கல்லூரியில் அதி
பராயிருந்த டக்டர் போக் (Dr. Boake) என்பவரின்
புகழுரைக்கு இலக்காயினர். இவரைப்பற்றி 'போக்'
என்பவர் எழுதிய நற்சாட்சிப் பத்திரத்தில் "கல்வி
கற்பிக்கும் தொழிலில் எனக்கு நாற்பது ஆண்டு அநுபவ
முண்டு. அருணாசலத்தைப் போல் சாமர்த்தியமும், விவேக
மும் வாய்ந்த வாலிபன் ஒருவனை நான் கண்டதேயில்லை.
அருணாசலத்தின் ஒழுக்கம் மிகத்திருப்தி கரமானதாகவே
இருந்து வருகிறது. எத்துறையிலும் மேலோங்க வல்ல
ஒருவாலிபன் என்றே நான் கருதுகின்றேன்" எனக்குறிப்
பிட்டார்.

அருணாசலம் அவர்கள் 1870ம் ஆண்டு ஆங்கிலச் சர்வ
கலாசாலை கல்விச் சகாயநிதியைப் பெற்று, கேம்பிரிட்சி
லுள்ள (Cambridge Christ College) கல்லூரியில் உயர்
தரக்கல்வி பெறச் சென்றார். அங்கு அவர் 'பவுண்டேஷன்'
கல்விச் சகாய நிதியைப்பெற்று, புராதன இலக்கியங்
களிலும் கணிதசாஸ்திரத்திலும் வல்லுநராகிப் பெரும்
புகழ் பெற்றனர். இவர்தம் கல்லூரித் தோழனை
Edward Carpenter என்பவருக்கும் இவருக்குமிடையில்
வளர்ந்த நட்பின் காரணமாக, அவர் அருணாசலம் அவர்கள்
இறந்தபின் தனக்கு இவர்மாட்டுள்ள நட்பின் கெழு
தகைக்கு அறிகுறியாக அருணாசலம் அவர்கள் எழுதிய
கடிதங்களில் சிலவற்றைத் தொகுத்து கிழக்குத் திக்கின்
சோதி (Light from the East) என்னும் பெயரால்
ஒருநூல் வெளியிடுவாராயினர்.



அருணாசலம் அவர்கள் 1875ம் ஆண்டு சிவில் சர்வீஸ்
(Civil Service) சோதனையில் சித்தியெய்தினார்கள். அப்
பரீட்சையில் முதன்முதலாகச் சித்தியடைந்த இலங்கை
வாழ்மகன் இவரேயாவர். இப்பரீட்சை இவர்தம் விருப்
பத்துக்கு மாறானதாயிருந்த போதிலும், இதனை இவரின்
மாமனாராகிய சர். முத்துக்குமாரசுவாமியின் வற்புறுத்த
லின் பொருட்டே எடுக்கலாயினர். இவர் பரீட்சையில் சித்தி
யெய்தியவுடன் இலங்கைக்குத் திரும்பியபோது உடனே
கொழும்புமா நகரிலுள்ள அரசாங்க மாகாண அதிபதி
காரியாலயத்திலும், பின்பு கண்டிப்பகுதி பொலிஸ் நீதி
மன்றத்திலும், மட்டக்களப்புப் பகுதியில் டிஸ்திறிக் நீதி
பதியாகவும் கடமையாற்றி வருவாராயினர். இவர்தம்
ஆற்றலும், வினைத்திறனும் புலப்படவே, அக்காலத்தில்
இலங்கைத் தேசாதிபதியாக இருந்த Sir Arthur Gordon
என்பார் இவரைக் காணிப்பதிவு கந்தோர்களின் தலைவராக
(Registrar-General) நியமித்தார். அப்பொழுது அருணா
சலம் அவர்களிலும் உயர்ந்த பதவி வகித்த முப்பது அதி
காரிகள் இருப்பவும், அவர்களுக்குமேலாக இவர்களை உயர்த்
தியது அதிகாரிகளுக்கிடையில் பெரும் பரபரப்பை உண்டு
பண்ணிற்று. ஆதலின் இவரின் உயர்ச்சியைக்குறித்து
அதிகாரிகள் தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ் செய்
தனர். ஆனால் தேசாதிபதியவர்கள் அவ்வதிகாரிகளின்
மறுப்புக்களைப் கவனியாது ஒதுக்கித்தள்ளி, அருணாசலம்
திறமையையே பெரிதும் பாராட்டுவாராயினர்.

அருணாசலம் அவர்கள் அவ்வுயரிய பதவியிலிருந்து
ஆங்கிருந்த பலகுறைகளையும் ஊழல்களையும் நீக்கிச்
செய்த திருத்தங்களோ மிகப்பல. அவற்றை விரிக்கிற்
பெருகும். இவர் பல ஆண்டுகளாக நீதிபதியாய் இரு
ந்தனரென்று, அஞ்ஞான்றிருந்த பிரதமநீதிபதி யொரு
வர் இவர்தம் திறத்தினைப் பெரிதும் போற்றிப்
புகழ்ந்து பாராட்டுவாராயினர். அருணாசலம் அவர்கள்
ஒரு சிறந்த அறிஞர். பழைய ஆங்கில இலக்கியங்
களிலும், கீழைத்தேய இலக்கியங்களிலும் இவருக்கு
நிறைந்த புலமை உண்டு. ஆங்கிலப் பேச்சு வன்மையும்
இலக்கிய ஆராய்ச்சியும் இவருடன் பிறந்தனவே எனலாம்.
இவர் எக்கருமத்தை எடுத்தாலும் இலக்கிய ஆராய்ச்சியாயி

னும், அல்லது சட்டப்பயிற்சியாயினும், அல்லது உத்தியோக அலுவலாயினும், கண்ணும் கருத்துமாக இருந்து மிக நுட்பமாகக் கடமையாற்றும் திறமை வாய்ந்தவர். இவரது (Census Report) குடிசனத்தொகை அறிக்கை இவர்தம் சேவைத் திறமையின் சிகரமாய் விளங்குவது.

இங்ஙனம் தமது சேவைத்திறனால் எங்கணும் புகழொளி பரப்பியபின் அருணாசலம் அவர்கள் 1913-ம் ஆண்டு அரசாங்க சேவையினின்றும் ஓய்வுபெற்றார்கள். முப்பத்தெட்டு ஆண்டுகளாக அரசாங்கசேவையில் இவர்காட்டிய திறமைக்கு அறிகுறியாக ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இவருக்கு 'நைட்' பட்டத்தை வழங்கினர். அதன் பின்னர் இவர் இடைவிடாது தத்துவஞான ஆராய்ச்சியில் ஈடுபடுவாராயினர். இத்தகைய உளப்பான்மை இயல்பாக உடையராயினும், அக்காலத்தில் மக்களினதும் நாட்டினதும் நிலையைப்பற்றிப் பெரிதும் சிந்தித்து மக்கள் முன்னேற்றம் ஒன்றனையே கருதி தேசசேவையிலே ஈடுபட்டு (Social Service League) என்னும் சமூகவளர்ச்சிச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். அதன் பின்னர் 'Ceylon National Congress' என்னும் மாபெருஞ் சபையைக் கண்டு, அதன் முதல் தலைவராகவும் கடமையாற்றினார்கள். அக்காலத்தில் இவர் ஆற்றிய (Our Political Needs) எங்கள் அரசியல் தேவைகள் என்னும் விரிவுரை அரசியல் துறையில் ஈடுபட்டோர் ஒவ்வொருவர் உள்ளத்தையும் கவர்ந்தது. அவ்விரிவுரையின் பெருமையும் நுட்பமும் பற்றிப் பலரும் பெரிதும் புகழ்ந்து போற்றினர். பலர் அரசியல் துறையில் சில திருத்தங்களே போதும் என்று கேட்டபோது, நமது பெருமகனார் அவர்கள் நமது நாட்டின் சுதந்திரமே இன்றியமையாது வேண்டப்படும் என்று அதற்குரிய முறைகளைக் கையாளுவாராயினர்.

இன்னும் அருணாசலம் அவர்கள் கல்விமுறையையும் திருத்தும் பொருட்டுத் தம் கருத்துக்களை அடிக்கடி கூறி வருவாராயினர். ஆங்கில சரித்திரம், பூமிசாத்திரம் என்பவற்றுக்குப் பதிலாக இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் சரித்திரம், பூமிசாத்திரம் என்பவற்றையே படித்தலும் படிப்பித்தலும் உகந்தனவென்று வற்புறுத்திக்



கூறினார்கள். இலங்கைச் சரித்திரம் சம்பந்தமாக பல விரிவுரைகள் நிகழ்த்தி, பாடசாலைகளிலும் ஏனைய இடங்களிலும் மக்களிடை இலங்கைச் சரித்திரத்தில் புதியதோர் ஆர்வம் பிறக்கும்படி இடைவிடாது செய்துவருவராயினர்.

சர். பொன். அருணாசலம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக இயக்கத்தின் தந்தையாவர். அவரின் தளரா முயற்சியாலே 1906 ம் ஆண்டு தைமாதம் இலங்கைப் பல்கலைக் கழகச் சங்கம் தொடங்கப்பட்டது. அருணாசலம் அவர்கள் பல்கலைக் கழகத்தோடு கொண்டிருந்த தொடர்பைப் பற்றியும், அவர் அதன்பொருட்டுச் செய்து போந்த தொண்டைப்பற்றியும் அவர் இறந்தபோது குறித்த பல்கலைக் கழகக் கல்லூரியில் முதலாவது அதிபரும் சிறந்த அறிஞருமான பேராசிரியர் மார்ஸ் (Professor Marrs) என்பவர் தம்மாணக்கர்க்கு நிகழ்த்திய பேச்சை இங்கு தரவிரும்புகிறேன். "இலங்கையில் பல்கலைக்கழகங்காணும் திட்டத்தின் தந்தையாராய் விளங்கிய ஒருவரின் ஞாபகத்துக்கு நம்நன்றியைச் செலுத்தும்பொருட்டு நான் உங்களை இங்கு ஒருங்குகூடும்படி கேட்டுள்ளேன். அரசாங்கஊழியர், அரசியல்வாதி, கல்விமான், கல்வித்துறையில் தொண்டாற்றியவர், கல்வி சமுகத் துறைகளில் சீர்திருத்தக்காரர் என்ற பலதுறைவாழ்வில் அவர் செய்து போந்த சேவைகளைப்பற்றியும், அவர் அடைந்த வெற்றிகளைப்பற்றியும் பலர் பலப்பட எழுதியுள்ளார்கள். ஆனால் அவர்தம் உள்ளத்திற்கு உகந்ததும், அவரது பிற்கால நாட்களில் அவரைச் சார்ந்த அனைவர்க்கும் ஊக்கமும் உணர்ச்சியும் நல்கியதுமான இப்பல்கலைக் கழகக் கல்லூரி என்னும் ஸ்தாபனம் சம்பந்தமாக அவர் எடுத்துக்கொண்ட நடிவடிக்கைகள் பற்றி நன்கு கூறப்படவில்லை. 1906ம் ஆண்டு சனவரி மாதம் 19ந் திகதியன்று இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுதல்வேண்டுமென்ற பிரச்சினை சம்பந்தமாக நடந்த பொதுக் கூட்டத்திற்கு சர். அருணாசலம் அவர்களே

தலைமை தாங்கினார்கள். இலங்கைப் பல்கலைக்கழகச்சங்கம் உருவாதற்குக் காரணமான பொதுக்கூட்டத்தில் அவர் முடிவுரையாகக் கூறிய சிலவற்றை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். " ஆகவே, இலங்கைப் பல்கலைக் கழகத்தை நிறுவ முயற்சிசெய்வதில், நம் முன்னோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதோடல்லாமல், இன்றி யமையாத ஒரு பணியையும் நாம் செய்கிறோம். பல்கலைக் கழகம் எவ்வாறு அமையவேண்டும். படிப்பு, பரீட்சை முதலியன எவ்விதம் அமையவேண்டும் என்பதை நான் வரையறுக்கப் புகுந்தேன் இல்லை. அவை வருங்காலத்தில் படிப்படியாக விருத்தியடைய வேண்டியன. அவற்றைக் குறித்து இப்போது பலதிறப்பட்ட கருத்துவேற்றுமை யல்லாது ஒருமுகப்பட்ட கருத்து இருத்தல் இயலாது. கேம்பிறிட்சு, லண்டன் அல்லது சென்னைப் பல்கலைக்கழக முறைகள் சம்பந்தமாக இப்போது பொதுமக்கள் முன் னிலையிலுள்ள உயர்தரக் கல்வித்திட்டம் எதனையும் தங்கு தடையின்றிப் பின்பற்றலாம். இத்திட்டங்கள் காலத்திற் கேற்ப மாறுபடுந்தன்மையவாதலால், நமது சூழ்நிலைக் கிணங்க சில மாறுதல்கள் ஏற்படவேண்டும். நிலைமாறுங் காலம் நீண்டதாகவோ அல்லது பயனற்றதாகவோ இல்லா திருக்கச் செய்வதே நமது சங்கத்தின் நோக்கம். இப் போது பாடசாலைகளிலும், ஏனைய தொழிற்கல்வி நிலையங் களிலும் சிதறிக்கிடக்கும் சக்திகளை ஒருமுகமாக ஒழுங்கு படுத்தும் ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளின் சிகரமாகத் திகழக்கூடியதும், நமது பாடசாலைகளும் கல்லூரிகளும் சக்தியிழந்து சோர்வுற்றிருக்கும் நிலையினின்றும் தடுத்து மக்களின் பண்பை உயர்த்திவரக் கூடிய்துமான பல் கலைக் கழகத்தை அமைப்பதே நமது சங்கத்தின் நோக்க மாகும்"......

(தொடரும்)

126910

## சமாஜம் நடத்துகிற தேர்வுகளின் பாடதிட்டம்

இளஞ்சைவப்புலவர் தேர்வு 1955 :—சைவ இலக்கியம் : விநாயகப் பிரபாவம் (1) ஞானியார் சுவாமிகள் அருளிய "சுப்பிரமணியத்தைக் குறித்த (2) பாம்பன்சுவாமிகளருளிய வியாசம்" (3) திருக்குறள் முதல் 10 அதிகாரங்கள் பரிமே லழகருரை (4) முதல் திருமுறை 1-50 பதிகங்கள் உரையுடன் (தருமபுர ஆதீனப்பதிப்பு) சைவ சாத்திரம் : திருவருட்பயன் —சிவபாதசுந்தரம் உரை, சிவஞானசித்தியார் முதல் சூத்திரம் சிவாக்கிரயோகிகள் உரை.

சைவப்புலவர் தேர்வு 1955 :—சைவ இலக்கியம் : தேவாரம் முதல் திருமுறை உரையுடன் (தருமபுர ஆதீனப் பதிப்பு) பெரியபுராணம் முழுமையும் திரு. ம. பா. எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் உள்பட திரு. க. வச்சிரவேல் முதலியார் இயற்றிய "திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே" என்னும் நூல் முழுமையும், பாம்பன்சுவாமிக ளருளிய சிவஞானதீபம், செவியறிவுறூஉ, சுப்பிரமணி யத்தைக் குறித்த வியாசம். சைவசாத்திரம்: சிவஞானபோதச் சிற்றுரை அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, சிவஞான பாடியம் முதல் இரண்டு சூத்திரங்கள். தேர்வு இந்தியாவி லும் இலங்கையிலும் 1955ளு அக்டோபர் மீ 16 தேதி ஞாயிற்றுக்கிழமை காலையிலும், மாலையிலும் நடைபெறும். இளஞ்சைவப் புலவர் தேர்வுக்குக் கட்டணம் ரூ. இரண்டு. சைவப்புலவர் தேர்வுக்குக் கட்டணம் ரூ. மூன்று. விண்ணப்பம் செய்தற்குக் கடைசி தேதி 31-8-1955. மற்ற விவரங்கட்கு ரிப்ளைகார்டு எழுதுக.

வாலாஜாபேட்டையில் சமாஜ மாதக் கூட்டம் :—இது 27-3-55-ல் திரு. ம. பா. தேவாரசபைக் கட்டிடத்தில் தலைமையில் நடந்தது. திரு. சண்முகதேசிகர் "எறிபத்த நாயனார்" பற்றியும், திரு. ச. சிவகுமாரனார் "சேக்கிழார் செய்யுள்நயம்" பற்றியும் பேசினார்கள். திரு. R. மாசிலாமணி முதலியார்(Mayer&Co.)திரு. S. பாலசுப்பிரமணிமுதலியார், திரு. வா. க. ஜனகிராம முதலியார் ஆகிய அன்பர்கள் கூட்டம், சிற்றுண்டி, இரவு உணவு முதலிய எல்லா ஏற்பாடு களையும் சிறப்படச் செய்திருந்தார்கள்.

**அறுபது நிறைந்த அன்பரிருவர்** :—நமது சமாஜத் தொண்டரும், சிதம்பரம் மிராசுதாரரும், காங்கிரஸ் முதலிய பல தாபனங்களின் உறுப்பினருமாகிய திரு. T. K. முத்து கிருஷ்ண பிள்ளையவர்கள் சஷ்டி பூர்த்தி விழா 8-2-55லும், "திருக்குறள் சொல்லடைவு" முதலியவற்றின் நூலாசிரியரும் சைவத் தொண்டருமாகிய திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள் சஷ்டிபூர்த்திவிழா 20-3-55லும் மிகமிகச் சிறப்பாக நடைபெற்றன. நமது சமாஜமும் வேறுபல சைவ நிலையங்களும் திருமடங்களும் வாழ்த்துரைகள் வழங்கின. அன்பர்கள் இருவரும் நீடூழி வாழ்க.

**மெய்கண்டார் வரலாறு** :—திரு. சு. அரங்கசாமிப் பிள்ளை, வக்கீல் விருத்தாசலம் (பக்கம் 21). இச் சிறு நூலில் மெய்கண்டதேவர் வரலாறு பற்பல கல்வெட்டு, செப்பேட்டாதாரங்களோடு விவரிக்கப்பட்டுள்ளது. திருக்கைலாய பரம்பரை மடங்களின் வரலாறும் ஒரு அனுபந்தமாயுள்ளது. வரலாற்றிலுள்ள வேறுபாடுகள் எல்லாம் தரப்பட்டுள்ளன. அருமையான வெளியீடு, சைவ மாணவர் கட்கின்றியமையாதது. (பல அச்சுப்பிழைகள் அடுத்த பதிப்பில் திருத்தப் படுதற்குரியன).

**மலாய் நாட்டுச் சந்தாதாரர்கள்** :—மலாய் நாட்டுச் சந்தா ரூபா நான்கு. குறைவாக அனுப்பியவர்கள் தயைகூர்ந்து பாக்கியை உடனே அனுப்புக. திரு. க. இராமநாதன் செட்டியாரவர்கள் மூலம் பல அன்பர்கட்குப் பத்திரிகை அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் தத்தமது சந்தாவைத் திரு. செட்டியாரவர்கள் மூலமாகவோ, நேரிலோ அனுப்ப வேண்டுகிறோம்.

**மாஜி பொருட்காப்பாளர்மேல் நடவடிக்கைகள்** :—சமாஜப் பொருட்காப்பாளராகப் பணிபுரிந்த திரு. தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் சமாஜத்திற்குச் செலுத்தவேண்டிய தொகைகளை வசூலிக்க நமது சமாஜம் நடவடிக்கை தொடங்கியுள்ளது. இதுபற்றி எவரேனும் தகவலறிவிக்க விரும்பினால் 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு விலாசத்திற்குக் கடித மூலம் அனுப்புக.

---

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14